அவர்கள் கையிலிருந்து பணத்தைப் போட்டு வீடுகளைக் கட்டி இருக்கிறார்கள். ஆனால், நெடுஞ்சாலைத் துறையினர் நெல்லூர் சாலைக்கு துணைசாலை போட வேண்டுமென்ற முறையிலே அங்கே அவர்கள் கட்டிய 35 வீடுகளை இடித்து விட்டார்கள். இதன் காரணமாக அங்கே குடியிருந்தவர்கள் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நெடுஞ்சாலைத் துறையினர் இன்றைக்கு பைப் லைன் கொண்டு போவதற்காக அங்கே இருக்கின்ற அவர்கள் கட்டி குடியிருக்கின்ற மற்ற வீடுகளைக்கூட இடிப்பதற்கு அவர்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி அவசியமில்லாமல் அந்த அகதிகளுடைய வீடுகளை இடிப்பது சரியல்ல. இன்றைக்கு அவர்கள் அகதிகளாக வந்திருக்கிறவர்கள், அவர்களை ஆதரிக்க வேண்டும், அவர்களை ஆதரிக்காமல் அவர்களை நிராதரவாக விடுவது சரியல்ல. இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம், அதை பொதுப்பணித் துறை எடுத்துக் கொள்வதா, நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்வதா, அவர்களுக்கே தெரியாமல் அது இன்றைக்கு வரைக்கும் வராமல் இருக்கிறது. இந்த அகதிகளை அவர்களும் நிராகரிக்கக் கூடிய முறையில் இதிலேயும் அவர்கள் அகதிகளாகக் கருதப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்காவது எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தோம். இதைப்பற்றி விவாதிக்க அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களிடம் அந்த டைப் செய்த காப்பி இல்லாததால் நீங்கள் பேசுவதை தடுக்க வேண்டாம் என்று விட்டேன். விவரமாகச் சொல்லிக் கொண்டு போகக் கூடாது. அதைப்பற்றிய விளக்கம் என்னிடம் வந்து சேரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மயிலாப்பூர் கோவில் திருவிழாவின்போது, அனுமதி பெறாமல் தெருக்களில் காபரே டான்ஸ் நடந்தது குறித்து

திரு. துரை முத்துச்சாமி: தலைவர் அவர்களே, நான் 30—3—78 ஆம் நாளன்று, கீழ்க்கண்ட பொருள்பற்றி அமைச்சர் அவர்களுக்கு கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன்.

சென்னையிலே உள்ள மயிலாப்பூர் கோவில் திருவிழா நடைபெற்றபோது அங்கே காவல் துறையினரின் அனுமதி பெறாமல், தெருக்களிலே ஆபாச நடனம் என்ற முறையிலே ரிக்கார்ட் டான்ஸ் நடத்தினார்கள். அதைப்பற்றி இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற முறையிலே நான் கொடுத்திருந்தேன்.

இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் அரசுத் தரப்பிலேயிருந்து வரவில்லை. இது முக்கியமான விஷயம், தெருக்களிலே இப்படி நடக்கிறது என்பதைப்பற்றி நான் கொடுத்திருந்தேன்.

இதைப்பற்றி இதுநாள்வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதன்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய பதில் அரசுத் தரப்பிலிருந்து வரவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பேச அனுமதித் திருக்கிறேனே அதையே நீங்கள் பாராட்ட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் : பேசுவதற்குத்தானே நாங்கள் வந்திருக் கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்துகொண்டே பேசுகின்ற பழக்கத்தை விடுங்கள். தாங்கள் எந்தவிதமான கவனஈர்ப்போ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ இதைப் பற்றிக் கொடுக்கவில்லை, தாங்கள் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) திருவிடைமருதூர், பந்தி கிராமம், அரிசன குடியிருப்புக்குத் தீவைத்தது குறித்து.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே. நான் விதி 42-ன் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டம், திருவிடைமருதூர் தொகுதியைச் சேர்ந்த பந்தி கிராமத்தில் 29—3—1978 அன்று அரிசன மக்கள் குடியிருப்புகளுக்கு தீவைத்தும், அரிசனரல்லாதார் அருவர் கொலை செய்யப்பட்டும், இதுவரை தக்க நடவடிக்கை எடுக்காமலும் பொதுமக்களுக்குத் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளாததாலும் ஏற்பட் டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதைப்பற்றி பதிலே வரவில்லை.

மேலும், 78 ஆசிரியர்கள்பற்றியும் சஸ்பெண்ட் செய்யப் பட்டதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றியும் இன்னும் தகவல் வரவில்லை. அதற்கும் பதில் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பந்த நல்லூரில் 3 பேர்கள் இறந்து போனார்கள். அதைப்பற்றியும் நான் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். இந்த மூன்று காரியங்களுக்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. முக்கியமான விஷயங்கள் என்று கருதி நாங்கள் கொடுக்கிறோம் ஆனால், மேலவையிலே இதைப்பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் சொல்ல வேண்டாம் இங்கே. உங்களுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லுங்கள். அரசுத் தரப்பிலிருந்து பதில் வந்தால் வரலாம்.